437

தண்டபாணிசகாயம்.

537
4.1911

# குமரகோஷ்டம்பக்தரசமஞ்சரி.

என்றும்.

இந்த திவ்யஸ்தோத்திரத்தை.

கோயமுத்தூர்

ஸ்ரீராஜபுரோஹிதம்வெங்கிடசுப்பாசாஸ்திரிகுமாரர்

நஞ்சுண்டசுப்புசர்மாவால் இயற்றப்பட்டு.

தொண்டாமுத்தூர்.

புரோஹிதம் வெங்கி[illegible]மணஜோஸியர் குமாரர்

துரைசாமிஅய்யரால்

சுண்டப்பாளையம்.

"பாகவதசக்ரவர்த்தி" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1911

இதின்விலை 0 2 0

## விளம்பரம்.

☞ சி. எஸ். பாபுஅய்யர் மானேஜ்மெண்டுக்குள்பட்ட

குமாரகோஷ்டம் காபிகிளப்.

மாகோராஜமஹால்வீதி கோயமுத்தூர்.

ஷை குமாரகோஸ்டத்தில் விற்பனைக்காக தயார்செய்துவரும் எஸென்ஸ், ஸ் காப்பியும் பல்லுபொடி தினுசுகள், சிப்பத்து தினுசுகள் ஓமத்திராவகமும் பிஸ்கெட் தினுசுகளும் மிட்டாய் காரசாமன்வகைகளும் பாபுஅய்யரால் தயாராகின்ற வாசனைப்புகலையும் பரிமளசிவக்காட்டப்பாக்களும் அட்வான்சுகொடுக்கும் மெம்பர்களுக்கு ஒன்னுக்கு முக்கால்விலையாக கொடுப்பதற்கய்யமில்லை, ஷை குமாரகோஷ்டத்தில் அட்வான்சுகொடுத்து மெம்பராக சேரவிருப்பமுள்ளவர்கள் குமாரகோஷ்டத்தின் மானேஜராகிய நஞ்சுண்டசாஸ்திரிகளுக்கு எழுதி நல்சுகளை தெரிந்துக்கொள்ளலாம்.

மானேஜர்.

குமாரகோஷ்டம்.

## வினாயகஸ்துதி.

பல்லவி.

கஜமுகனென்பொருளே சித்திவினாயகனுன்னருளே.

அனுபல்லவி.

மூஷிகவாஹன மோதுகதாடனா
முந்தியேநருள்தந்த மூலபிருகிருதிவாசா (கஜ)

சரணங்கள்.

நினைத்திடும்பக்தி பூர்ணமாய்வைத்து
தேடினேனுந்தனை போற்றிடுவேன் பாதம். (க)
குமாரனைபஜிக்க நினைத்தேனானுந்தனை
கூடியவினைதள்ளி ரக்ஷிக்கவேணுமே. (கஜ)
வாணியே சரஸ்வதி வந்தென்னையாளுமே
கூடியகுற்றத்தை தள்ளெறியவேணுமே. (கஜ)
அன்னைமீதவிபாலா சுந்தரிவந்திதன்முன்
தொண்டன்துரைசாமி தொல்லைதான்கார்த்துக்கொள் - (கஜ)
தப்புவொப்பிருந்தாலும் தரணியுள்ளோரெல்லாம்
பொருத்தென்னை ரக்ஷிக்க போதுமேயிதுசமயம். (கஜ)
குற்றமிருந்தாலும் கூடியென்னைமன்னிக்க
தாழ்ந்துகொண்டேனுமை நஞ்சுண்டனென்றே. (கஜ)

கஜமுக—

---

## அம்பாஸ்துதி

பாலாத்திருபுரசுந்தரியே ஷண்முகமாதா சங்கரியே.

அனுபல்லவி

பாலனென்னை காத்துரக்ஷி வீசிகோபத்தை தள்ளிபிடி. (பாலா)

சரணங்கள்.

உன்னைநானும் நம்பினேனே உறுதிமொழியைத்தேடினேனே
உண்மைவிளங்கத்தாண்பாடி இன்னும்கிருபைகூடவில்லையென்று
காணும்மதிகெட்ட மூடன்தானே நானவிதமவதாரமதை [பாலா]

கட்டியென்னைமோசம்செய்துபரிக்ஷிக்கலாகுமோசாம்பவியே(பா)
ஐங்காரத்தைக்கொண்டாதரவாய்க்லீங்காரத்தைதாநனுஸரித்து
சௌவ்யென்றுகூடசேர்பித்து பின்முன்முன்பின்தொடராக பாலா
பக்தனும்நஞ்சண்டன்நான் தானேபிழைகளைசேர்ப்பித்துபாடினேனே
பொறுத்தென்னைபாதரித்தாளுவாயேபோனபிடமெல்லாம் கூடவ
யே[பாலா]

பல்லவி

அம்பாதுவம் பாஹிமாம்
சூலினீ துர்க்காம் பா துவம் ரக்ஷமாம்

அநுபல்லவி

மஹிஷமர்த்தினி ஸிம்மவாஹினி
மாணிக்யாமணி பூஷணி
திருபுரசுந்தரி சூலினீ துர்காம்பி
கா பரமேஸ்வரி.

சரணங்கள்.

கஞ்சலோசனி சண்டமர்த்தின[illegible] கூடஸ்தாகுலரூபிணீ
சம்புமோஹினி வர்மகேஸ்வரி க[illegible]கண்டி காத்யாயணி(அம்)
நிஷ்களா நிர்குணா காந்தா நிர்மதா[illegible] மோகநாசினி
கௌலினி கேவலாதீராகுலயோகி[illegible] நாராயணி. (அம்)

பல்லவி.

அன்னையே என்சுவர்ணமணி[illegible]ய ரூபத்தை தான்திருவாய்(அன்

அநுபல்லவி

விருஷபவாஹனமீதிலேறி விரிவாய்வந்துஎன்னைக்காராய் (அன்)

சரணங்கள்.

உன்னையேநம்பியும்நானே உறுதிதான்கொண்டிருந்தேனே
தந்தையானசுகவனே ச ணீசனுன்னை நான்போற்றி. (அன்)
சாரதா என் சந்திரமௌளி கூடதான்போற்றிடுவேன்
வாடியேயலைந்துநான் பாடியேபணிந்தேனே. (அன்)
பக்தர்களை ரக்ஷிக்கும்நீ பாமசுந்தரிநீயே
பாவியானயென்னையாளும் பாலா திருபுரசுந்தரீ. (அன்னை)
துர்கியே சூலினீ தேவி தாயே உன்னைநம்பினேன்

காளிகாபக்தியைக்கொண்டு கதறினேன் நஞ்சுண்டனே. (அன்)

நிந்தாஸ்துதி.

பல்லவி.

மூர்க்கபுத்தியுடையவளே யுந்தன் கூடவருமோபொருளே

அனுபல்லவி

பாருக்குள் யுந்தன் மேல்யாருக்கும் கெஞ்சிக்குள்படும் பதினொரு பல்லிலொருபல் (மூ)

சரணங்கள்.

ஒவ்வொருகாசாகசேத்துறாய் ஓதவில்லா காரியத்தில்போக்குறாய்
னதிரிவந்தாலொருணகபார்க்குறாய் பதரிவந்தால்பயந்துதோர்க்குறா [ய்(மூ)
கோபத்தால்சாபிக்கலாகுமா சாபம்பலிக்காமல்போகுமா
தூபம்போட்டாலென்னபாவமா கூபம்வெள்ளம்வந்தாவகுமா(மூ)
பக்தியால்காலத்தைத்தளளுமா அருத்தநாசியின்றுலட்டுமா
தேவர்முதல்கோபம்தீருமா வியாதிவந்தாலென்னலாபமா (மூ)
மாதாவும்தாய்தான் மதுரமீனாக்ஷி மக்களைக்காப்பாற்றுமிதுவேக [ண்காக்ஷி
தேடியவினைபூஜைக்கிதுவோர் தீன்சாக்ஷி
நாடியநஞ்சுண்டன் சொல்வதேமாக்ஷி (மூ)
மூருகனைநம்பினல் வீண்போகாதம்மா
முந்தியே நான்சொல்ல தெளிவில்லையம்மா
மூகம்பார்க்கத்திருத செய்தாயே அம்மா
முரட்டுத்தனம்வேண்டாம் மூறைதள்ளாதம்மா (மூ)

பல்லவி.

சுப்பிரமணியம் சுப்பிரமணியம் சுந்திரரூபனே.

அனுபல்லவி.

சச்சிதநந்தாபரமசிவார்பித புத்திரசிகாமணியே (சுப்)

சரணங்கள்.

ஓம்காரத்தை அர்பிதம்செய்த பார்வதிபுத்ரேசா
ஓம் ஆஹரவென்றுடிக்கூத்தாடி நம்பினேனுன்பாதம். (சுப்)
சௌந்தர்யரூபனே சச்சிதநந்தா சாம்பசிவபுத்ரேசா

சௌனகாதிகளாதரித்தருளிய சங்கரப்பிரியவேலா. (சுப்)
ஸ்ரீகிரிவாசா சுககுணநேசா ஸ்ரீலோலாத்மஜனே.
ஸ்ரீமனோபீஷ்டத்தை யாதரித்தருளிய வள்ளிமனோஹரனே.(சுப்)
கிலீம் காரத்தினாலல்லவோ பயந்து ஓடிய தசுரகூட்டம்
கிலேசத்தையடைந்த வீரசிகாமணிக்கிதுவே நல்லயோகம். (சுப்)
ஹ்ரீமென்றுடிய பத்மாசுரனை துவஜமென்றெண்ணிய ஷண்முக
[வேலா
ஹ்ரீம்காரத்தினாலல்லவோ மயில்மேலேரின குமாரகுருநாதா(சு)
ஐம்பதுகோடி யசுரரைக்கொல்ல அவதரித்தார்நவவீரரும்கூடி
ஐம்காரத்தைமுன்கொண்டதினாலே அபயத்தைகொடுத்தாழ்ந்தார்
ஈசமகேசராசாம்பசதாசிவ னீன்றெடுத்தருளிய புண்ணியகுமரா
ஈவியுமிறக்குமு யில்லாமற்போச்சே நான்செய்தபாக்கியமும் நம்பி
[வினைச்சே. (சுப்)
நஞ்சுவைதானினிதிம்பெனே மோசம்அதைபார்த்தருளும்தோஷவி
[னாசம்
நஞ்சுண்டவனே காத்தருள்நாதா உன்னையல்லால்சந்திரபிரகாச(சு)
லம்கையையாண்டராவணன்மேல்கைலங்கிரிதன்னைவைத்தாளுநாதா
லம்கிணிபோல்நின்றசுரக்கூட்டத்தை காவலுக்குள்வைத்தாளும
[கந்தா
வஞ்சனைநெஞ்சில்வைத்தாலுமென்னைகண்டித்து தண்டனைசெய்தி
[டுமுருகா
வம்ஜனையின்வாசாபிஷேகமதை செய்திடு மூடரைதினையாதே நெ
[ஞ்சில் (சுப்)
சரஹணபவனென்பவனே குஹனே சத்ருசம்ஹாரத்தை கொ
[ண்டவனே.
சடாக்ஷரத்தை கைகொண்டபேரை ஆதரித்தாளும் ஆறுமுக
[மே. (சுப்)
ராஜபுரோஹிதவெங்கிடசுப்பாசாஸ்திரிகளருளால்அவதரித்தேனே
நஞ்சுண்டசர்மா நாமத்தைக்கொண்டுன் ரூபத்தைத்தேடி அலை
[றேன்முருகா. (சுப்)

குடிம்மி

பல்லவி.

குடிம்மியடிப்பெண்கள் கும்மியடி நீங்கள்
கூடிக்கும்மியடியுங்கடி.
வேலவனென்றேவேண்டியும்பாடி
ஆடிக்கும்மியடியுங்கடி. (கும்மி)

அரஹரசிவசிவ அன்பானகுமா
ஆடியும்பாடியும் தேடினேனே.
நம்மைவந்தாளும் சித்திவிநாயகனை
நாடியே நஞ்சுண்டன் தேடலுற்றேன்.
கோயமானகர்தன்னில் வோங்கியே நிற்கின்ற
கோனியம்மன் பாதம் போற்றிடுவேன்.
நன்மையைத்தேட ஜகத்தாரெல்லாம்
நாடுங்கள் கோனியம்மான் பாதம். (கும்மி)

பக்திமார்கத்திலுதித்தவனுமிவன்
தண்டபாணிசேவை செய்தவனும்
ஊருக்கே உபகாரியாகவேநினைந்து
உள்ளுக்குள் குமரனை தேடலுற்றான். (கும்மி)

தர்மந்தலைதன்னில் காக்குமப்பா இந்த
குமரன் சேனைவீண் போகாதப்பா
மலைபோலவந்தபிணிகள் யாவற்றும்
பனிபோலபாழாக்கும் குமரனப்பா. (கும்மி)

ஆதியில்சஞ்ஜகிரி வாசம் தன்னில்
ஸ்வப்பனத்தில்வந்ததைவம்தானே
வாரத்தில்சேர்ந்து இருப்பதைமறந்து
நிற்பது நியாயமோ வேலவனே. (கும்மி)

குமரசாமியென்றவரும் வஜ்ர
தண்டாயுதத்தை கைகொண்டவரும்
வேலுவைத்தரித்து வேலாயுதனென்று
லீலையாய்நாமம் படைத்தவரும். (கும்மி)

கந்தஸ்வாமி என்றவரும் இந்த
தண்டபாணியாய் நின்றவரும்
சக்திஸ்வரூபத்தை பெற்றவரும் இந்த
வேங்கைமரமாய் நின்றவரும் (கும்மி)

இந்திரனைஜயம் கொண்டவரும் பூர்ண
சந்திரன்போல் ரூபம் கொண்டவரும்
சஞ்சிதபாபங்கள் எல்லாவற்றையுமே
விரக்கும்எழுத்தைக்கண்டவரும் (கும்மி)

ஆனைமுகர்க்குப் பின்பிறந்தவரும் தேவ
சேனைகள்பதியாய் இருந்தவரும்
அமரர்குறைவைத் தேரிடத்தீர்த்து தேவ
யானையைமணம்புரிந்தவரும் (கும்மி)

புள்ளிமயிலேரிவந்தவரும் தேவ
யானையைக்கூஷணம்பிரிந்தவரும்
நாரதர்வாக்கியத்தை நாணயமாய்க்கொண்டு
வள்ளியைதேடி யலைந்தவரும். (கும்மி)

அறுமுகமென்று எண்ணியிருந்தேன்
அரிதமாய்வேடனாய் வந்ததென்ன
வள்ளியைமணம்கொண்டல்லவோ யிந்த
சுந்திரரூபத்தை எடுத்தாயப்பேர். (கும்மி)

சூரவம்சத்தை கெடுத்தல்லவோ யிந்த
பச்சைமயில் குக்குடத்துடன்
வேடிக்கையாகவே வள்ளிதெய்வானையும்
விரும்பினகைலத்தை சுற்றிவந்தார். (கும்மி)

உன்னைநம்பின பக்தருக்கபயம்
கொடுத்தாதரிப்பாய் என்று நம்பி
உருதிமொழியாய்பாடத்தைப்பிடித்து
வேர்வழிகடப்பதும் இல்லையில்லை (கும்மி)

உலகத்தில் கருணாகரனென்றபெயரும்
உன்னைவிடதெய்வம் இல்லையில்லை

பாசாங்குசெய்யாதே பதரிகைவிடாதே
பாவியைகை தூக்கி ஏந்துமைப்பா. (கும்மி)

ஆதியில்கஷ்டத்தை கொடுத்தென்னைவாட்டி
சோதித்த சேதியை கண்டதுண்டு
பக்தியைக்கொண்டு சக்தியைவென்று
கதரியழுதுதொழுததுண்டு (கும்மி)

காலமும்தள்ளிபோகுதப்பா எந்தன்
வயதுமுப்பத்தி ஐந்துமாச்சு
கியானோபதேசத்தை பெறவேணுமென்றால்
பக்தியும்சக்தியும் கிட்டவில்லை. (கும்மி)

தர்மத்தினால் முக்திகிடைக்குமென்றால்
தரித்திரமும் தலையாக நிற்குதப்பா
தொண்டர்களின் தொண்டு சேவைதான்செய்ய
நிற்கநிமிஷமும் இல்லையப்பா. (கும்மி)

சம்சாரமென்பதே சமுத்திரம் தானப்பா
உன்னை நினைக்காத நேரமும் மில்லையப்பா
கஷ்டமும் நஷ்டமும் தீராதயோகம்
கண்டுகொண்டால் முக்திகிடைக்குமேயோகம் (கும்மி)

கதறினேன்கஷ்டத்தில் பொருத்தாள்வாய்முருகா
கடைக்கண்ணின்பார்வையும் அடியேனைநினைத்து
பாங்கானபக்தியும் முக்தியும் கொடுத்து
பாதாரவிந்தத்தில் அடிமைதான்கொள்ளு. (கும்மி)

குமாரனைதேடிப்பிடித்தேனே நெஞ்சில்
குடிக்கும்வரத்தை பிடிக்கனுற்றேன்
பாங்கானநஞ்சுண்டன் பக்திக்கிசைவாய்
அடிமையாகத்தான எழுதலுற்றேன். (கும்மிப்படி)

ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

அரஹரகுமர என்முருகா உன்னை

67655

யாதாரபூதமாய் நினைத்தேனேவேலா
இன்னும் எனை அவகாசம் அது
ஈரம்நெஞ்சில்வைக்காத என்தோஷம். (ஆரஹர)

குமரகோஷ்டம் என்றநாமம் அதில்
நாலாறுகாலமாய் குமரனை வேண்டி
சேர்ப்பித்ததோர் நெம்பர்கூட்டம் அதில்
பொருக்கியே குமரனுக்கர்பிதம்செய்தேன். (அரஹர)

ஓம்காரபொருளென்ற நாமம் அதை
ஓடியேகண்டர்தத்தை சொன்னவேலன்
ஓதுவார்க்கருகில் தான் சென்று அதை
ஓராடிப்பிடித்ததோர் திகப்பன்சாபத்தை. (அரஹர)

சௌக்கியத்னைதக்கொடுக்காமல் வாட்டி உன்
சௌந்தரியரூபத்தைக் காட்டிமல் ஓட்டி
சௌனகாதிகளை தான் நாட்டி அப்போ
சௌந்தர்யவல்லிபுத்ரேசனுப் காட்டி. (அரஹர)

ஸ்ரீம்காரபெருமைதான்பெற்று அந்த
ஸ்ரீகள்மனேபீஷ்டத்தை தான்வெற்று
ஸ்ரீகிரிவாசனுப் சற்று அப்போ
ஸ்ரீவேதவேதாந்த கிரந்தங்கள்கற்று. (அரஹர)

கிலேசத்தை வைத்தாயே எனக்கு அதை
கிலிப்தமாய்பாடினேன் சக்திபால் உனக்கு
கிலீங்காரபொருள்பெற்ற தனக்கு அதை
கிலிப்தமாய் அரிந்திடும்வினைகொண்டவனுக்கு (அர)

ஹிம்சைதான் பட்டெழுந்தேன் கூட
இன்னும்பொருக்காத துன்பம்கொண்டேனே
ஹிரீம்காரபெருமைகண்டேனே கூட
ஹிம்சிக்க இதுவுந்தான் தருணமென்றேனே. (அர)

ஐராவதம்போல் கொண்டேனே அங்கே
ஐம்பதுகோடி யசுரரைக்கொன்றவனே

ஐங்காரபெருமைபெற்றவனே அங்கே
ஐந்தாறுமேகத்தில் அபயம்கொடுத்தவனே. (அர)
ஈவிளைஇசைவாய் கொடுப்பவனே இந்த
இறக்கத்தைத் தான்கொண்ட ஹிருதயமுள்ளவனே
ஈம்ரெடுக்கும் சக்தியுள்ளவனே அந்த
ஈசன்கோபத்தா லுதித்தஷண்முகனே (அர)
நஞ்சுண்டன் முறைதப்பகாலம் அந்த
நஞ்சுவை விளக்கமே கண்யில்லா கோலம்
நம்திவாகனானுமே மூலம் அந்த
மூலத்தைத்தாண்டி நம்மைபார்க்கபாலம். (அர)
லஜ்ஜைதான்விட்டெழுந்தேனே அந்த
லம்கிணிபோல் ரூபம் கண்டுபயந்தேனே
லம்போதரரைகண்டேனே அவரை
லக்ஷணமாய் நான் பஜித்துவந்தேனே. (அர)
வம்ஜனே நெஞ்சில்வைத்தேனே அதில்
வழிதப்பியாருக்கு துரோகம்செய்தேனே
வரிசையில் யாரைகெடுத்தேனோ அந்த
வம்பானசெய்கைக்குள் பட்டிருந்தேனே (அர)
சரவணபவனே உன்பாதம் ஆதி
சங்காபிரியத்தை தான்கெடுத்தேனே பாபம்
சக்தியில்லாமல்வீண் நியாயம் இந்த
சடாக்ஷரத்தை தான் நினைக்காதமாயம். (அர)
வித்தைபுத்தியில்லா மூடன் அதில்
குணபேதபேதம் தெரியாதோர்லஜ்ஜன்
இனிபொருக்காசாதென்கையில் வந்து
இப்போதே அபயந்தான் கொடுப்பாய்என்குமா. (அர)

காவடிச்சிந்து.

பங்கயமுகனே சிங்காரமானஸ்ரீ
வேலனே வடிவேலனே குணசீலனே.

குறமங்கைவள்ளிலோலா சங்கையில்லாதருள்
பாலனே கொரீபாலனே.

கோரமானஜய தாரகாதிரூர
காலனே முனிபாலனே அநுகூலனே
பிரம்மதேவனுக்கு பிறணவத்தைவிவரித்த
சீலனே பக்தபாலனே.

கர்மபாசமதில் வாடியலேகுறேன்
பாவமே மிக கோபமே பரிதாபமே.
காமவலேப்பட்டு ஏமாருதே எந்தன்
தேகமே மதியீனமே.

எங்கிவாடினேனே ஓங்கிதேடுறேனே
ஈசனே முருகேசனே குமரேசனே
ஏகாந்தமானதோர் ஆஸ்சர்யமுறைசொல்
நேசனே வள்ளிநேசனே.

ஈசத்வாதி எட்டு சித்திகளுணர்ந்த
பாலகா உமைபாலகா சைனலோலுகா
ஈசனுதி அஷ்ட பாலகர்கள்மகிழ்
பாலகா பக்தபாலகா

லக்ஷசோதரர்கள் கோஷ்டியாகினின்று
கூறுவார் ஜயம்கோறுவார் சுபம்கூறுவார்
லக்ஷியமில்லாம லசுரர்கூட்டமதை
தள்ளுவார் முறைவிள்ளுவார்.

ஹிரீம்காரபீஜத்தின் உண்மையை யறிந்திடும்
முருகா இங்குவருக ஹரிமருக
ஹிரீம்காரத்தினல் தொண்டர்தம்மைகாற்பாய்
முருகா கமலேமருகா.

ஹம்சவாகனனை சிறையிலடைத்தாயே
கந்தனே பாசபந்தனே பாபமந்தனே
ஐஸ்திரீதிலாரோகணித்தா வருவாய்

கந்தனே சுபநந்தனே.

சக்திவேலனைக் கொண்டாடிநிற்கிறேனே
சதியே உன்மதியே என்கதியே.
சத்தன்பொற்பாதத்தினருமைதான்தெருவிக்க
கியானமே குணயினமே.

கட்டுமோடைப்போல கர்மத்தைதவிலக்காமல்
அழுதேன் பாதம்பணிந்தேன் உனைநினைந்தேன்.
தேவர்மகிழ்ந்திடும் கியாதியைதான்கொண்ட
தேவனே குமரதேவனே.

ஹரிஅரசேர்க்கையில் அவதரித்தாயென்ற
சாமியே அப்பாசாமியே அய்யாசாமியே.
ஹரிமோகினி யவதாரத்தில் உதித்த
சாமியே அய்யாசாமியே.

லம்போதரார்கூட வல்லபாகர்பத்தை
அழித்தார் பகமடைத்தார் சுகம்கொடுத்தார்.
லம்போதரரொத்தாசை தான்கொண்ட
ஈசனே குமாரஈசனே.

ஹ்ரீம்காரமொறச்சலின் இன்பத்தை தான்கொண்ட
குருவே சத்குருவே குலகுருவே.
ஹ்ரீம்காரசப்தத்தி லுள்பட்டுநிற்கின்ற
சேகரு கருணகரு.

சமயசஞ்சீவான ஷத்புருஷோத்தமா
சங்கரா பிரியவேலனே ஹரபுத்ரனே.
சமயம்போல் பக்தர்கோறிக்கைமுடிக்கின்ற
சஞ்சிவி சமயசஞ்சீவீ.

கருணைக்கொடிவீற உன்பாதம் நான்தேட
சமயமே இதிசமயமே நல்லசமயமே.
கமலம்போல் என்னைதான் பாதாரவிந்தத்தில்
சேர்த்திக்கொள் அருகில்சேர்த்திக்கொள்

லக்ஷணமானதோர் உன்ரூபம்தான்கொண்டு
சேருவாய் ஜோதிமயமாய் காண்பித்தேருவாய்
லக்ஷ்மியும் வள்ளித்து சேர்ந்திருப்பதினாலே
காட்டுவாய் உன்னைக் காட்டுவாய்

ஹ்ரீம்காரிபுத்ரனே சூர்யப்ரகாசனே
தருவாய் வரம்தருவாய் சித்திபெருவாய்
ஹிம்சைக்கதிபதியாகிநிற்கின்ற செவ்வேல்
சேகரா கருணாகரா

நஞ்சுண்டனிடம்பெற்ற பக்திப்பெருமையாலே
கார்ப்பாய் பாதுகாற்பாய் முக்திகொடுப்பாய்
நம்பினபக்தருக்கபயம் தான்கொடுத்திடும்
பாணியே தண்டபாணியே.

நொண்டிச்சிந்து.

தண்டபாணியைக் கண்டுகொண்டேன்
பிளேக்கில் ஆனைமலைக்குதான் போனபோது
வருஷமும் சௌம்மியமதாம்
மாதமும் மார்கழி எழாம்தேதியன்று
ஸ்வப்னமும் கண்டதுபோல்
வாரத்தில்வந்தது சேதியைக்கேளுமய்யா
நஞ்சுண்டன் கோரிக்கை
அதைஅனுசரித்தே வந்திருந்துகொண்டா
சூலினி தேவியதாம்
பாலாத்ரிபுரசுந்தரி என்றவளாம்
வாராகி தேவிகூட
இவர்கள் சேர்ந்துகொண்டார் குமரகோஷ்டம்தன்னில்
காளிகாதேவியதாம்
அப்பா பக்தர்களின்குறை தீர்த்திடுவான்
வெள்ளிக்கிழமையிலே
மற்றதேவர்கள் பூஜைகாலமது

மொண்டியும் சண்டியுமே
செய்வினைகர்மத்தி லொட்டியகர்த்துசங்கை
தீராதபித்தரோகம்
பைத்தியமும் பார்வையென்றே குணம்கண்டுகொண்டால்
குணமாகும் குஷ்டரோகம்
தேவர் அம்சையில் வந்திடும் முனிவர்சேஷ்டை
ஒதுங்கித்தான் தூரம்நிற்கும்
அப்பாவோடிய கற்பத்தைநிலைநிறுத்தும்
[illegible]முண்டுபண்ணும்
அதைதான் நம்பாதமோசத்தைக் கொள்ளாதீர்கள்
கால்வலிதலைவலியும்
அய்யாதான் பொருக்காகாத் வருத்துவலி
துன்பமும் கரைந்துபோகும்
நீறிட்டவெல்லம்போல் நிற்காது ஓடிப்போகும்
குமரனைதேடுங்கள்
அவரவர் பக்தியைப்போல் முறைதந்திடுவார்
வடிவேலனைக்கோருங்கள்
உங்கள்மனக்கவலை யெல்லாம்தீர்த்திடுவார்
தண்டபாணியை நினையுங்கள்
வர்தவினைவந்தால் அதை ஓட்டிடுவார்
சுப்பிரமணியமென்று
முறையிட்டால் வள்ளிதெய்வானுடன் வரம்தருவார்
குமரகோஷ்டத்தின் அருமைதன்னை
கேட்கும் பக்தர்களின்பாதம் போற்றிடுவேன்
தனதினதோம்தனதி

ஓடம்.

பக்தர்களாவருமைய்யா
குமருரைப் பாருமைய்யா
உலகத்தில் கியாதிருயன்
உன்மையான தண்டபாணி
போற்றிடுவேன் முருகா பாதம்

முடுகு.

ஓம்காரபீஜத்தைத் .போடியே பிடித்து
சௌந்தர்யரூபனை சௌக்கியமாய்த்தேடி
ஸ்ரீசக்திவேலுவை சீக்கிரமாய்யெடுத்து
கிலீங்காரநாமத்தின் கிலேசத்தை யடைந்து
ஹிரீங்காரி ஓம்காரி ஹிரீமென்றமொரைச்சல்
ஐங்காரிபாலாவும் ஐந்துபேர்கூடி
ஈசன் தான் போற்றிடும் ஈவிதாமீறுடு
நஞ்சுவை விலக்கவே நன்மைதான்தேட
லம்போதரருமே லஜ்ஜைதான் விட்டு
வஞ்சனை தான்நெஞ்சில் வைத்தபேர்கெட்டு
சடாக்ஷரத்தை தான் சத்தியாய் நினைத்து
ஏங்கானபூஜைதான் ரஹஸ்யமாய் செய்ய
வம்பானகார்யமும் வழியோடு ஆகும்
நடபானவீர்யமும் நம்பினால் கிடைக்கும்
பக்தியும் சக்தியும் பாக்கியமாய்முடியும்
வரிசைதானெழுத்துக்கள் வழியோடுபோட்டு
பாடினால் புண்ணியங்கள் முக்தியும்கிடைக்கும்
முருகனிடதரிசனம் பூர்ணமாய்கிடைக்கும்
தப்புகள் ஒப்புகள் தாராணமந்திரம்
நஞ்சுண்டன்சொல்வதே நயமானதந்திரம்
முருகனிடபாதத்தை நம்பினேனின்று
வேலவனே நமாகோஷ்டம்

பக்தியால்முக்திபெரும்
சித்தத்தைநான்பிருடப்படுத்தி
சிருணபக்தன் செம்பருக
சேர்ந்துண்டபிரசாதமிது.

முடுக்கு.

தீங்கானமாய்கையை வர்ங்காமலாக்கி
பாங்கானமார்க்கத்தை பண்புடனேகாட்டி
தூங்காதசுழிமுனையை சூக்ஷமமாய்பூட்டி
ஓங்காமல் என்னீறவை என்றைலும்முட்ட
பாடிப்படித்தேன் நின் பக்தியின் பெருமையால்
தேடிப்பிடித்தேன் நின் திருநாமமந்திரம்.

காலைதான்ஸ்நானமும் ஜபதபத்தழகும்
பூஜைதான் நைவேத்தியம் காபிதான்மாத்திரம்
இட்டிலியும் தோசையும் இன்பான துகையல்
சாத்தான காபியும் உப்புமாஉடனே
பேறமும்சாறமும் தீர்மாய்செய்து
லாபத்தின் கணக்கைத்தான் ஸ்வாமிக்குவொப்பி
வெற்றிலைபாக்குடனே புகையிலையும்கூட
வைத்துதான் சாமானம் வாங்கிவரத்தொடங்கி
மத்தியானபூஜைதான் மாயமாய்முடித்து
லட்டுபோங்கிபுகூடி சொகுசாலபேணி
நன்மையாய் இம்மூர்த்திக்கிவர்தான்செய்து
மரிபியும் பூரியும் மைசூர்ப்பாகுடனே
அல்வாவும்தினுசுகள் அடுக்காகசெய்து
பிஸ்கெட்டுதினுசுகள் விரிவாகமுடித்து
நொக்கல்கள்தினுசுகள் தேவைதான்பெட்டால்
வரிசையாய்மொறபாக்கள் பேடாவும்சேர்த்து
பக்கோடகாரு போங்கிதான்முருக்கு
தயிர்வடைவடையுமே தனியாககடலை

ஓமத்தைதான்கொண்ட பொடியென்றபெயரும்
காபிகள் சத்துகள் கணக்கானவிலைக்கு
ஓமத்துசத்துகள் ஊரெங்கும்விற்று
வாசனை புகையிலை சிவக்காய்டப்பா
பற்பொடிகூடவே பாக்குபொடிவித்து
சிற்பத் தினுசுகள் விதவிதமாக
மாரிதான் வியாபாரம் செய்துதானின்று
ஸ்வாமிக்கிகாணிக்கை கணக்காககொடுத்து
தர்மமே ஜெயமென்று கால்பங்குதன்னி
முடிவானபக்தியை பூர்ணமாய்நினைத்து
குமரனிடபாதத்தை நம்பினேனின்று
ஏலேலோ குமரர்பாதம் முருகய்யா குமரர்கோஷ்டம்

நஞ்சுண்டன்போற்றிடுவேன்
அரஹர முருகர்பாதம்
ஏலேலோ குறைகள்தீர்த்து
குமரேசா காற்றபாயிப்போ

பல்லவி.

கருணிஞ்சரு கருணைசரு வேலா கருனிஞ்சரா

அனுபல்லவி

கரமம்தானேபட்டி வதலிவிடிசின
அர்ஜுனகிரிவாச அந்தே குமரேசா (கருனி)

சரணங்கள்.

பக்திசக்தியிவ்வ பாதாமுனேமுரெக்கி
சித்தாகிஞ்சிநேடு பாபிநன்னேடபாய (கருனி)
பதறி ஒஸ்துவானி பக்நூலலனுமுரெக்கி
சின்னவயசுலோனே சித்கம்புகில்பீதி (கருனி)
வித்தேபுத்திலேனி கர்மிஸ்ட்டுடைநேது
காந்நூலபைபிரேம கடதேரகா உண்டி (கருனி)
பக்நூல்லோபிரேம உஞ்சியுன்னுவானி

கோரிதனைமுந்து   கொன்னுல்லகிரிந்தாட   (கருணி)
சக்திமுக்தியிசகி   சமுஸ்யாமுனாதப்பி
கடதேர்ச்ச ரா வேலா   கந்தானிதோகூட   (கருணி)
பாடிதினைமொற   நஞ்சுண்டடனுஉஞ்சி
பாதாரவிந்தம்பு   கெதியிச்சிரக்ஷிம்சு   (கருணி)

வாசுதேவனே வந்தாளுமெந்தனே
என்ற மெட்டு.

பல்லவி.

தண்டபாணியே கழுத்து கணத்தைதீர்ப்பயே
உந்தன்பக்தியைக்கொண்டுருதியாகநம்பினேன்.

அனுபல்லவி.

பக்தர்களின்குறைகளைத்தீர்த்து
அடிமையான என்னை ஆதரித்தாளும்.   (தண்)

சரணங்கள்.

ஐந்தாருவருஷமாய் வருதே உந்தன்
பக்தன்கண்டத்தில் படர்ந்துனின்றதே   (தண்)
வாடியே யலைந்தாருமாசமாய்
தேடியேவந்துன்பாதம் போற்றிநான்   (தண்)
நம்பினவனை மோசம் செய்யாமல்
கரைத்துதள்வயே கந்தநாதனே   (தண்)
கர்மவாசத்தில் வந்திருந்தாலும்
கடக்கண்ணின் பார்வை வைத்துதள்வயே   (தண்)
தேடிசெய்வினை செய்திருந்தாலும்
வாடவைத்ததை வகைத்துதள்வயே   (தண்)
கண்டஹாரமென்றெண்ணும் வியாதியாய்
இருந்திருந்தாலும் அறத்திதள்வயே   (தண்)
காத்துசங்கையின் குணமென்றெண்ணவே
காரணம் ஒன்றும் இல்லையில்லையே   (தண்)
இன்னதென்றுதான் அறியவில்லையே

அறிந்திடும் உனக்கிதும் கஷ்டமா (தண்)
உன்னைநம்பியே வாக்களித்துவிட்டனே
உறுதியாகவே சத்தியம்சொன்னனே (தண்)
எந்தன்வர்க்கினில் நீ குடியிருப்பதாகவே
எண்ணித்துணிந்தேனே குமரவேலனே (தண்)
இந்தபக்தனின் பெருமை புகள்சியாகவே
ஒப்பிமானது பொருத்துசேர்ப்பவே (தண்)
குமரகோஷ்டம் தான் என்றபக்தியை
குறைகளில்லாமல் திருத்திசேர்ப்பயே (தண்)
உன்பக்தன் வாக்கினில் வந்ததேமுறை
ரூதுபக்ஷமாய் அறிந்துதீர்ப்பயே (தண்)
அன்னைதந்தையும் காளிரூபிணி
தேவிவாராகி வணங்கிநின்றேனே (தண்)
குமரனே என்னை காத்துரக்ஷியும்
பாலசுந்தரிபக்தன் நஞ்சுண்டன் (தண்)

அக்ஷரமாலை

சக்தசகிதகணபதிம் என்றவர்ணமெட்டு.

| | |
|---|---|
| அமரர்குறவைதீர்த்தயே | யுல்லாம் தெரிந்திருப்பயே |
| ஆதி பவனை கெடுத்தயே | ரவிதனைப்போல்கறப்பயே |
| இங்குவந்து நிற்பயே | லக்ஷணமாய் யிழுப்பயே |
| ஈவிதான் கொண்டிருப்பயே | வந்து என்னை காப்பயே |
| உறுதியாக சொல்வயே | மூதரகுதா மறிந்தயே |
| ஊரிநெஞ்சில் நிற்பயே | ளண்ணிவென்றிருப்பயே |
| எங்கும் கியாதிபெற்றயே | றங்காரம்போட்டெழுப்பியே |
| ஏறி மயில்மேல் வருவயே | னங்காரங்கம்தீர்ப்பயே |
| ஐந்துரூப மெடுத்தயே | ஜகத்தைரக்ஷித்திருப்பயே |
| ஒதுங்கிமலையில் நின்றயே | ஸரவணபவவென்றயே |
| ஓடிவந்து காப்பயே | ஷண்முகனைபோற்றியே |
| ஔஷதம் தான் கொடுப்பயே | ஹஸ்தசேவைசெய்கிறேன் |

கர்மம்விலக்கிசேர்ப்பயே
ஙகரகுட்மவிட்மயே
சந்திரஹாரம்தரித்தயே
ஞாபகத்தில்வைப்பயே
டக்குமுக்திகொடுப்பயே
ணகரம்சேர்ந்திருப்பயே
தத்தளிக்கசெய்வயே
நம்பினேனென்றிருப்பயே
பட்டபாட்டை கெடுப்பயே
மருத்துவம் சேர்த்திதள்வயே

க்ஷமித்து என்னைகாருவாய்
குமரகோஷ்டம் சேர்கவை
குறைகளில்லாமற்சொன்னேன்
உன்னைக்கூடிபாலாவும்
உறுதிபானதேவியும்
தாயி காளி சூலினி
வாருகியென்றெண்ணினேன்
வணங்குகின்றேன் நஞ்சுண்டன்.

பல்லவி

மனசுதுவ[illegible] மர்மமுதெலிய
மறசினிலிசிதிவேரு சாமி மறசினிலசிதிவேரு—

அநுபல்லவி.

சூருணிஜம்பின வீருடுநீவு
சமயமுதல்புரு நாதாநேடு சமயமுதெல்புரு (மனசு)

சரணங்கள்.

மல்லெமொல்லெலு மருவிருவாக்ஷிலு
சுகமுகசுந்திரரேஜா சாமி தெஸ்தினி இம்புகரேஜா (மனசு)
பாரிஜாதமு பொந்தினதண்டலு
ஷண்முகமேநேடு நீகு குமருனிகர்பிதம்நேடு (மன)
பாலக்ஷீரமுனு பாகமுகோவா
தெஸ்தினிபேணியுகூட அதி வேலுனிகிம்புகதோட (மன)
இம்புகவேலுனி கிஸ்தினிவீல்யமு
சரசமுலாடகநேடு அதிபிரியமுகவேடினிகூட (மன)
தண்டமுபெட்டின கந்துனிபைனி
விரஹதாபமு பொந்திதிநேடுசிவ சுப்பிரமணியனிதோகூட (மன)
ஓம்காரமுலோ பீஜாக்ஷரமுனு
தொரகபெடிதிவோரா சாமி நாகண்டிகி கணபடலேதா (மன)

ஓண்டிகாலிமீதா குக்குடமெக்கின
தண்டபாணியுநீவே வள்ளினி சிறதெச்சினவாடுனிநீவே (மன)
பக்துடுநேனு செப்பிதிகோபமு
சரபகபுரோவுமு நாதா சோமாஸ்கந்துடனேபேருகாத (மன)
வேடுடுமாறி வேங்ககநிலிசி
மூசிவிதாத ஆயினதேட்னு சாமி ஏனுகதெச்சினதெட்னு (மன)
வகதப்பின வாரிகிமோக்ஷமு
இச்சிரக்ஷிம்சனுலேதா இபுடு மறசிமிலிசிதிவேரு (மன)
நீபக்துலமோ நன்மேனுகடனு
எஞ்சிபுரோவுமுநாதா இதி நஞ்சுண்டனிமொறகாத (மன)

லாவி.

பல்லவி.

குமாரகோஷ்டத்தையாளும் அடியார்க்குருமரேசன்மங்களத்தை
அனுதினமும்புகழ்ந்துரைப்பேன் பூர்ணமாய்
வாலிதான்பாடிநிற்பேன்
சூலினியும்தேவிபாலா வாருகி வானபத்திரகாளியென்று
கோருவேன் வள்ளிதேவி தெய்வானை சேர்ந்தவொரு லாவிபாடி (கு)
சிவசுதனே சுப்பிரமணிய சிரான கோபத்தை தள்ளிநின்றால்
பாங்கானலாவியைத்தான் பாடுவேன் பக்தர்பெருமை லாவி (கு)
வகையுடனே ஆடிபாடி கூடவேசேர்ந்தவொருபக்தன்நானே
நஞ்சுண்டனென்றுதேடி அடிமைதான் குடுத்தாளும்லாவிலாவி (கு)

மங்களம்.

மங்களமணி மங்களமணி மங்களமனரேஎன்றமெட்டு.

பல்லவி.

மங்களமென்றுடிபாடி நின்றமங்களம்
மங்களமதை கோரினடுமை பாடும்மங்களம்

அனுபல்லவி.

சிவபுத்திரா ஷண்முகமே கிர்த்திமங்களம்
மங்கைவள்ளிவேலா உனக்காந்திமங்களம் (மங்கள்)

சரணங்கள்.

சூரபத்ம னவனுமெடுத்த சிங்காரவேலனே
சூர்வம்சகண்டனத்தை இருத்திக்கொண்டதேவனே (மங்கள்)
ஆவியோடு நீருமாக கலந்துநின்றகுமரனே
அன்பருக்கபயம்குடுக்கும் ஆதிரூபனே (மங்கள்)
பர்மபாசமதைவிளக்கி சேர்க்கமங்களம்
கர்மி என்னை யாதரிக்கும் ஆத்மமங்களம் (மங்பள்)
தொண்டனனை துரைசாமி ஆசைக்கானமங்களம்
தொண்டாமுத்தூர் வாசியெல்லாம் கூடிமங்களம்
பாலகாளிருவினியும் தேனிக்கெல்லாம் மங்களம்
பக்தனடுமை நஞ்சுண்டன் பாலரெல்லாம்மங்களம். (மங்கள்)

குமரகோஷ்ட பக்தசமஞ்சரி முற்றிற்று.